குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உளுந்தூர்பேட்டை.

**முன்னிலை : திருமதி.வே.கோமதி, பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை.

2026–ம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள், புதன்கிழமை.

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1262/2025**

**CNR.NO.TNKA10 -004789-2025**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>எலவனாசூர்கோட்டை காவல் நிலைய<br>குற்ற எண் 55/2018 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | எதிரிகள் பெயர்:<br>1. திரு. கலியபெருமாள்<br>த/பெ. சின்னதம்பி<br>(இறந்துவிட்டார்.அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)<br>2. திரு. முருகன் (வயது 51)<br>த/பெ. கலியபெருமாள்<br>3. திரு.சங்கர் (வயது 45)<br>த/பெ. கலியபெருமாள்<br>4. திரு.குமார் (வயது 46)<br>த/பெ. கலியபெருமாள்<br>5. திருமதி.வசந்தா<br>க/பெ கலியபெருமாள் (இறந்துவிட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.) |
| குற்றப்பிரிவுகள் | 1 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323<br>2 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 323<br>3 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 324, 506(ii)<br>4 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 323<br>5–வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 355 |
| வனையப்பட்டது | 2 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 323<br>3 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 324, 506(ii)<br>4 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 324 |
| தண்டிக்கப்பட்டது | இறுதியாக, 1 மற்றும் 5 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 2 –வது எதிரி இதச பிரிவுகள் |

| | |
|---|---|
| | 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும், 4 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 2 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும், 4 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளிகள் இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர்கள் விபரம்

| வ. எண் | பெயர் | த.பெ / க .பெ | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | கலியபெருமாள் (இறந்துவிட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது) | சின்னதம்பி | – | – | – | – |
| 2. | முருகன் | கலியபெருமாள் | இந்து | கூலி | மேலப்பாளையம், எலவனாசூர்கோட்டை, உளுந்தூர்பேட்டை | 51 |
| 3. | சங்கர் | கலியபெருமாள் | இந்து | கூலி | இந்திரா நகர், எலவனாசூர்கோட்டை, உளுந்தூர்பேட்டை | 45 |
| 4 | குமார் | கலியபெருமாள் | இந்து | கூலி | மேலப்பாளையம், எலவனாசூர்கோட்டை, உளுந்தூர்பேட்டை | 46 |
| 5 | வசந்தா (இறந்துவிட்டார். அவருக்கு எதிரான | கலியபெருமாள் | – | – | - | – |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது) | | | | | |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 25.02.2018 |
| புகார் | : | 25.02.2018 |
| கைது தேதி | : | A1, A3– 27.02.2018 |
| பிணை விடுவிப்பு | : | A2, A4, A5 – This court bail order in Crl.M.P. No. 187/2018 Allowed on 06.03.2018<br><br>A1, A3 – This court bail order in Crl.M.P. No. 133/2018 Allowed on 02.03.2018 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 21.05.2026 |
| வழக்கு விசாரணை முடிவு | : | 27.05.2026 |
| எதிரிகள் காவலில் இருந்த நாட்கள் | : | A1, A3 – 27.02.2018–06.03.2018 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 16.09.2025 |
| Date of Questioning | : | 22.05.2026 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | Compromise Petition MP.No 1/2026 is dismissed on 25.05.2026<br><br>311 Cr.P.C Petition MP.No. 2 /2026 is allowed on 25.05.2026 |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief Cross<br>1.25.05.2026 25.05.2026<br>2.25.05.2026 25.05.2026<br>3.25.05.2026 25.05.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 26.05.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |

| | | |
|---|---|---|
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது 16.09.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 27.05.2026 –ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் உதவி வழக்குரைஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கோவிந்தன்.,BA., B.L., அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் வாதியும் 1 வது எதிரியும் உடன் பிறந்த சகோதரர்கள். இருவருக்கும் நிலம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் எலவனாசூர்கோட்டை வினாயகா பள்ளிக்கு அருகில் இருவருக்கும் பொதுவான இடத்தில் 22.05.2018 ந் தேதி 1வது எதிரி வீடு கட்டிக் கொண்டிருந்ததை 17.30 மணிக்கு வாதி கேமாரா மேனை கொண்டு புகைப்படம் எடுத்த போது 1 வது எதிரி நீ என்னடா புண்ட போட்டோ எடுக்குற என்று என்னை அசிங்கமாக திட்டி சட்டையை பிடித்து இழுத்து கையால் வாதியின் கன்னத்தில் அடித்தும் சொற்பகாயத்தையும் 2 வது எதிரி கையால் வாதியின் முகத்திலும் முதுகிலும் அடித்து சொற்பகாயத்தையும் 3 வது எதிரி கொடுவாளால் வாதியின் இடது காலில் வெட்டி சொற்பகாயத்தையும் 4 வது எதிரி தடியால் வாதியின் வலது கால் மற்றும் முதுகில் அடித்தும் சொற்பகாயத்தையும் 5 வது எதிரி வாதியை துடப்பத்தால் அடித்தும் 3வது எதிரி வாதியை இனிமேல் இங்க வந்தா உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து தெரியவருகிறது. எனவே 1 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b). 323 – ன் படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 323 –ன் படியும், 3 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 324, 506(2) –ன் படியும், 4 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 323 –ன் படியும் 5 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 355 – ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் என எலவனாசூர்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 2 முதல் 4 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 1 மற்றும் 5 எதிரிகள் இறந்துவிட்டதாக இறப்புச்சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது. எனவே 1, 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 2 முதல் 4 எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகளுக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 240(1) –ன் படி 2 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும், 4 –வது எதிரி மீது இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, கு.வி.மு.ச பிரிவு 240(2) –ன் கீழ் அவர்களிடம் விளக்கி வினவிய போது எதிரிகள் பொய்வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :-**

(1) அ.சா.1 திரு.பிரகாஷ் தனது சாட்சியத்தில், "நான் எலவனாசூர்கோட்டையில் வசித்து எலக்ட்ரிஷியன் வேலை செய்து வருகிறேன். ப.சா.1,2 யை தெரியும் அவர்கள் தற்சமயம் உயிருடன் இல்லை. ப.சா.1 எனது சித்தப்பா, ப.சா.2 எனது பாட்டி. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மாமா செந்தில் கையொப்பம் செய்தார். 8 வருடங்களுக்கு முன்பாக நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது பேலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். " என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2 திரு. இளந்திரையன் தனிபிரிவு காவல் சங்கராபுரம் (special wing) தனது சாட்சியத்தில், "நான் சங்கராபுரம் காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணி புரிகிறேன். சம்பவ காலத்தில் எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது 25.05.2018 ம் தேதி நான் அலுவலக பணியில் இருந்தபோது உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கண்ணன் த/பெ சின்னதம்பி

என்பவரிடம் இருந்து புகார் வாக்குமூலம் பெற்று மேற்படி புகார் வாக்குமூலத்தில் மனு ரசீது எண். 87/2018 வழங்கி பின் மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். புகார்தாரர் கண்ணன் அளித்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3 திரு. சுந்தர்ராஜன் காவல் சிறப்பு உதவிஆய்வாளர் தனது சாட்சியத்தில், " நான் தற்போது எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.சடையப்பிள்ளை என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் திரு.சடையப்பிள்ளை அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது 27.02.2018 –ம் தேதி நிலையம் ஆஜராகி கண்ணன் த/பெ சின்னதம்பி படையாட்சி என்பவர் கொடுத்த புகாரை பெற்று சி.எஸ்.ஆர்.87/2018 வழங்கினார்.புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 55/2018 இ.த.ச.பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 355, 506(2) முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பிரகாஷ், செந்தில் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரிகளை தேடி சென்றதில் மேலபாளையம் மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் கலியபெருமாள், சங்கர் ஆகியோரை 27.02.2018 ம் தேதி 13.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான கண்ணன், சந்திரா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தீபதர்ஷினி அவரை சந்தித்து விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றார். மருத்துவர் அளித்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் மனு ரசீது வழங்கிய இளந்திரையன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் . பின் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என கண்டு 147, 148, 294(பி), 323, 324, 355, 506(2) இ.த.ச.ன்படி எதிரியின் மீது புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்" என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6. கு.வி.மு.ச பிரிவு 313—ன் படியான நடவடிக்கை:—**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)—ன் படி கேள்விகள் கேட்க, எதிரிகள் அதை பொய்சாட்சி என மறுத்துக் கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**6(a) அரசு தரப்பில் வாதம் :**

அரசு தரப்பில் 2 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 323 —ன் கீழான குற்றச்சாட்டுகளும், 3 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324, 506(ii) —ன் கீழான குற்றச்சாட்டுகளும், 4 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324—ன் கீழான குற்றச்சாட்டுகளும் போதுமான சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகள் குற்றவாளிகள் எனவே, தண்டிக்கப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**6(b) எதிரி தரப்பில் வாதம்:**

எதிரிகள் தரப்பில், வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் இறந்துவிட்டதாலும், மற்ற சாட்சிகளும், எதிரிகளும் உறவினர்கள் என்பதாலும் தங்களுக்குள் உள்ள பிரச்சனையை ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி முடித்து கொண்டார்கள் என சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், சாட்சிகளில் எவரும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை நிரூபிக்கும் வகையிலும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்யப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:—**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது 2 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 323 —ன் கீழான குற்றச்சாட்டுகளும், 3 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324, 506(ii) —ன் கீழான குற்றச்சாட்டுகளும், 4 —வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324—ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**8. தீர்வு :-**

(8.1) இவ்வழக்கின் வாதியும் 1 வது எதிரியும் உடன் பிறந்த சகோதரர்கள். இருவருக்கும் நிலம் சம்மந்தமாக முன்விரோத இருந்து வந்தது. இந்நிலையில் எலவனாசூர்கோட்டை வினாயகா பள்ளிக்கு அருகில் இருவருக்கும் பொதுவான இடத்தில் 22.05.2018 ந் தேதி 1வது எதிரி வீடு கட்டிக் கொண்டிருந்ததை 17.30

மணிக்கு வாதி கேமாரா மேனை கொண்டு புகைப்படம் எடுத்த போது 1 வது எதிரி நீ என்னடா புண்ட போட்டோ எடுக்குற என்று என்னை அசிங்கமாக திட்டி சட்டையை பிடித்து இழுத்து கையால் வாதியின் கன்னத்தில் அடித்தும் சொற்பகாயத்தையும் 2 வது எதிரி கையால் வாதியின் முகத்திலும் முதுகிலும் அடித்து சொற்பகாயத்தையும் 3 வது எதிரி கொடுவாளால் வாதியின் இடது காலில் வெட்டி சொற்பகாயத்தையும் 4 வது எதிரி தடியால் வாதியின் வலது கால் மற்றும் முதுகில் அடித்தும் சொற்பகாயத்தையும் 5 வது எதிரி வாதியை துடப்பத்தால் அடித்தும் 3வது எதிரி வாதியை இனிமேல் இங்க வந்தா உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும், சாட்சிகளின் விசாரணையில் இருந்து தெரியவருகிறது. எனவே 1 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 294(b). 323 – ன் படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 148, 323 –ன் படியும், 3 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 324, 506(2) –ன் படியும், 4 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 323 –ன் படியும் 5 வது எதிரியின் மீது இதச பிரிவுகள் 147, 148, 355 – ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

(8.2) ப.சா.1, ப.சா.2 இறந்துவிட்டதாக இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பார்வை மகசர் சாட்சியான அ.சா.1 திரு. பிரகாஷ் அரசு தரப்பு முதல் விசாரணையில், " ப.சா.1,2 யை தெரியும் அவர்கள் தற்சமயம் உயிருடன் இல்லை. ப.சா.1 எனது சித்தப்பா, ப.சா.2 எனது பாட்டி. ஆஜர் எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது மாமா செந்தில் கையொப்பம் செய்தார். 8 வருடங்களுக்கு முன்பாக நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது பேலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்" என்று பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்காமல் போலிசார் விசாரணை வாக்குமூலத்திற்கு முரண்பட்டு பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

(8.3) அ.சா.2 திரு.இளந்திரையன், நிகழ்நிலை புகார்தாரரின் புகார் வாக்குமூலத்தை பெற்று மனுரசீது எண். 87/2018 வழங்கி, பின் மேல்விசாரணைக்காக புகார் வாக்குமூலத்தை காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார். அ.சா.2–யை எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்கையில், உதவி ஆய்வாளர் 27.02.2018 –ம் தேதியில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் வாக்குமூலம் 14.03.2018–ம் தேதியன்றே காவல் உதவி ஆய்வாளரால் பெறப்பட்டுள்ளது. மேலும், அ.சா.2, நிகழ்நிலை புகார்தாரரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பதிவு செய்த மனு ரசீது எண்.87/2018 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

(8.4) அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் திரு. சுந்தர்ராஜன் ஆவணக்கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் சமாதான மனு தாக்கல் செய்து M.P.No. 2/2026, 25.05.2026 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(8.5) அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து அ.சா. 1 பார்வை மகசர் சாட்சி, பார்வை மகசர் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியமளிக்காததும், அ.சா.2 ஆல் மனு ரசீது எண்.87/2018 பதிவுசெய்யப்பட்டும், மனு ரசீது எண்.87/2018 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததும், அ.சா.3 ஆவணக் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளதும், புகார்தாரான ப.சா.1 இறந்துவிட்டதால் அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் உறுதிப்படுத்தப்படாததும், 22.05.2018 –ந் தேதி, எதிரிகள் அனைவரும் கொடுவாள், தடி போன்ற ஆயுதங்களுடன் கும்பலாக ஒன்று கூடி, 2 வது எதிரி கையால் ப.சா.1–ன் முகத்திலும், முதுகிலும் அடித்தும், 3 –வது எதிரி கொடுவாளால் ப.சா.1–ன் இடது காலில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 4 வது எதிரி தடியால் ப.சா.1–ன் வலது கால் மற்றும் முதுகில் அடித்தும், 3–வது எதிரி ப.சா.1–யை இனிமேல் இங்க வந்தா என்னை கொன்றுவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார் என்ற அரசு தரப்பிலான குற்றச்சாட்டு அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. ஆக 2 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழான குற்றச்சாட்டு, 3 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழான குற்றச்சாட்டு , 4 –வது எதிரி மீதான இதச பிரிவுகள் 148, 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபனம் செய்யப்படவில்லை. எனவே 2 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும், 4 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, 1 மற்றும் 5 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 2 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும், 4 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 2 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 323 –ன் கீழும், 3 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324, 506(ii) –ன் கீழும்,**

**4 –வது எதிரி இதச பிரிவுகள் 148, 324–ன் கீழும் குற்றவாளிகள் இல்லையென முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்து குறித்த உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.05.27 12:15:01 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.

| | |
|---|---|
| **இணைப்பு :** | |
| **அரசு தரப்பு சாட்சிகள்**:– | |
| அ.சா.1 | திரு.பிரகாஷ் த/பெ மணி |
| அ.சா. 2 | திரு. இளந்திரையன் த/பெ பழனிவேல் (தனிப்பிரிவு காவலர்–சங்கராபுரம் (Special wing) |
| அ.சா.3 | திரு. சுந்தர்ராஜன் த/பெ தண்டபாணி (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**:–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | 27.02.2018 | பார்வை மகசரில் உள்ள அ.சா.1–ன் கையொப்பம் |
| அ.சா.ஆ. 2 | 25.02.2018 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ. 3 | 27.02.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ. 4 | 27.02.2018 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ. 5 | 27.02.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ. 6 | 25.02.2018 | ப.சா.1 கண்ணன் என்பவரின் காயச்சான்று |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்</u>**: இல்லை
**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள்</u>** : இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சான்றாவணம்</u>** : இல்லை

V GOMATHI Digitally signed by V GOMATHI Date: 2026.05.27 12:15:13 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.

**<u>நகல்கள்</u>**

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், கள்ளக்குறிச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர், உளுந்தூர்பேட்டை
3. காவல் உதவி ஆய்வாளர், எடைக்கல் காவல் நிலையம்.

**<u>குறிப்பு</u>**

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.